


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 322 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 18 – செவ்வாய்க்கிழமை 02 ஜுலை 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 322 : Thiruvalluvar Year - 2055 - Aani 18 - Tuesday 02 July 2024 - Chennai 16 Pages ₹ 5.00


## மோடியும், பா.ஜ.க.வும் மட்டுமே ஒட்டுமொத்த இந்துக்கள் கிடையாது!

# விசாரணை அமைப்புகள் அனைத்தும் மோடியின் ஆணைப்படி செயல்படுகின்றன!

## “பா.ஜ.க. அரசிடமிருந்து அரசியல் சட்ட அமைப்பைக் காப்போம்” என நாடாளுமன்ற மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆவேச உரை!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (1.7.2024) தலைமைச் செயலகத்தில், மாநிலக் கல்வி கொள்கை தயாரிக்க ஓய்வு பெற்ற நீதியரசர் த. முருகேசன் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையினை சமர்ப்பித்தது. இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, குழுவின் உறுப்பினர்கள் – பேராசிரியர் இராம சீனுவாசன், எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணன், பேராசிரியர் சுல்தான் அகமது இஸ்மாயில், முனைவர் அருணா ரத்னம், திருமதி.ஜெயஸ்ரீ தாமோதரன், துளசிதாசன், டி.எம்.கிருஷ்ணா, இரா.பாலு, முனைவர் ஃப்ரீடாஞானராணி, பேராசிரியர் பழனி, குழுவின் உறுப்பினர் செயலர் முனைவர் ஏ. கருப்பசாமி, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ. குமரகுருபரன், பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



**புதுடெல்லி,ஜுலை.2-**

**“மோடியும், பா.ஜ.க.வும் மட்டுமே ஒட்டுமொத்த இந்துக்கள் கிடையாது!” எனவும், “விசாரணை அமைப்புகள் அனைத்தும் மோடியின் ஆணைப்படி செயல்படுகின்றன!” என்றும், “பா.ஜ.க. அரசிடமிருந்து அரசியல் சட்ட அமைப்பைக் காப்போம்” என நாடாளுமன்ற மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆவேச உரையாற்றினார்.**

**குடியரசுத் தலைவர் உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானம் குறித்து மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசியதாவது:**

“எனது இன்றைய உரையை சிவன் படத்தை காண்பிப்பதில் இருந்து தொடங்குகிறேன். இந்தப் படத்தை இங்கு ஏன் காண்பிக்கிறேன் என்றால், இதில் உள்ள யோசனைகளை எதிர் கட்சிகளாகிய நாங்கள் கொடுக்கிறோம்.

### எதிர்க்கட்சியாக இருப்பதில் பெருமை!

ஒருபோதும் பயப்படக் கூடாது என்ற எண்ணமும் சிவனின் உருவத்தில் இருந்துதான் பிரதிபலிக்கிறது. சிவன் கழுத்தில் உள்ள பாம்பு உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும், அதில் இருந்து பின்வாங்கக் கூடாது என்பதையும் வலியுறுத்துகிறது. அந்த உணர்வோடு தான் நாங்கள் போராடி வருகிறோம். இந்த யோசனை எங்களை எதிர்க்கட்சியாக மட்டுப்படுத்தியுள்ளது. எனக்கு இது தெரியும்.

### திரிசூலம் என்பது அகிம்சையின் சின்னம்!

நாங்கள் எதிர்க்கட்சியாக இருப்பதில் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் உணர்கிறேன். எங்களை பொறுத்த வரை அதிகாரத்தை விட உண்மை தான் சக்தி வாய்ந்தது. எங்களுக்கு அதிகாரம் முக்கியமில்லை. ஆனால், உங்களுக்கு அப்படி இல்லை. உங்களுக்கு அதிகாரம் மட்டுமே முக்கியம். அதுதான் உண்மை.

சிவன் இடதுதோள் ஓரமாக திரிசூலத்தை பிடித்திருக்கிறார். திரிசூலம் என்பது வன்முறையின் அடையாளம் அல்ல. மாறாக, அகிம்சையின் சின்னம். அதனால்தான் இடதுபக்கம் வைக்கப்பட்டுள்ளது. வன்முறையின் சின்னமாக இருந்தால் சிவனின் வலதுகை பக்கம் திரிசூலம் இருந்திருக்கும். நாங்கள் பா.ஜ.க.வை எதிர்த்து போராடியபோது எங்களிடம் வன்முறை இல்லை. நாங்கள் உண்மையை பாதுகாக்க துணிந்தபோதும் வன்முறை வெளிப்படவில்லை.

### சத்தியமும், அகிம்சையும் மகாத்மா காந்தியின் போதனை!

உண்மை, தைரியம் மற்றும் அகிம்சையில் இருந்து வெளிப்படுகிறது. நீங்கள் வெறுக்கும் ஒரு சின்னமாக இருக்கலாம்.

அதுதான் காங்கிரஸ் கட்சியின் சின்னமான அபய் முத்ரா. பயமின்மையையும், சத்தியத்தையும், அகிம்சையும் இந்த முத்திரை வலியுறுத்துகிறது. சத்தியமும், அகிம்சையும் மகாத்மா காந்தியின் போதனைகள்.


தொடர்ச்சி 4-ஆம் பக்ககம்


# ‘நீட்’ தேர்வு: மக்களவையில் விவாதிக்க மறுப்பு!

## எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு!

*புதுடெல்லி, ஜுலை 2 -*

*நீட் முறைகேடு குறித்து விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்டதை கண்டித்து, மக்களவையில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஒட்டுமொத்தமாக வெளிநடப்பு செய்தனர்.*

*இரண்டு நாட்கள் விடுமுறைக்குப் பின் மக்களவை நேற்று மீண்டும் கூடியதும், குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடங்குவதாக சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார். இதையடுத்து எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி எழுந்து நீட் தேர்வு முறைகேடு தொடர்பாக ஒத்திவைப்பு தீர்மானத்திற்கு நோட்டீஸ் அளிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டி, நீட் முறைகேடு குறித்து விவாதிக்க வேண்டும் என தெரிவித்தார்.*

*அவர் தமது கருத்தை முழுமையாக தெரிவிக்க அனுமதிக்காமல், சபாநாயகர் இடைமறித்து குடியரசுத் தலைவர் மீதான விவாதம் நடைபெறுகிறது பிறகு பார்க்கலாம் என கூறி, ராகுல்காந்தியை தொடர்ந்து பேச அனுமதிமறுத்தார்*

*நீட் தேர்வு முறைகேடு என்பது விவாதிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சினை. இது குறித்து ஒத்திவைப்பு தீர்மானம் மூலம் விவாதிக்க அனுமதி கோரி ஏற்கெனவே நோட்டீஸ் அளித்துள்ளோம்.*

*நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவது என்பது ஒட்டுமொத்த நாட்டுக்கு நாம் தரக்கூடிய செய்தியாகும். பல லட்சம் மாணவர்கள் நீட் முறைகேட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*எனவே நீட் முறைகேடு குறித்து ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்து விவாதிக்க வேண்டும் என்று ராகுல் காந்தி வலியுறுத்திப் பேசினார்.*

*இதற்கு சபாநாயகர் ஓம்.பிர்லா, இப்போது குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறுகிறது. பிறகு பார்க்கலாம் என்று கூறினார்.*

*சபாநாயகரின் இந்த சர்வாதிகார போக்கிற்கு கண்டனம் தெரிவித்து காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அனைவரும் மக்களவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.*

## இஸ்லாமியர்கள் வந்தேறிகள் என்றால், ஆரியர்களும் வந்தேறிகள்தான்! அரசியல் சட்டத்தின் விழுமியங்களை அழித்துக்கொண்டிருக்கும்

# பிரதமர் மோடி அரசியல் சட்டத்தை முத்தமிடுவது வேதனையானது!

## நாடாளுமன்ற மக்களவையில் – ‘நீட்’ ரத்து – சாதிவாரிக் கணக்கெடுப்பை வலியுறுத்தி ஆ.இராசா எம்.பி. உரை!

**புதுடெல்லி, ஜுலை 2-**

**நாடாளுமன்ற மக்களவையில் நேற்று உரையாற்றிய கழக உறுப்பினரும் கழக துணைப் பொதுச்செயலாளருமான ஆ.இராசா, ‘நீட்’ ரத்து மற்றும் சாதிவாரிக் கணக்கெடுப்பை வலியுறுத்தி உரையாற்றுகையில், “இஸ்லாமியர்கள் வந்தேறிகள் என்றால், ஆரியர்களும் வந்தேறிகள்தான்! அரசியல் சட்டத்தின் விழுமியங்களை அழித்துக் கொண்டிருக்கம் பிரதமர் மோடி அரசியல் சட்டத்தை முத்தமிடுவது வேதனையானது” என்று குறிப்பிட்டார்.**

நாடாளுமன்ற மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கழக உறுப்பினர் ஆ. இராசா பேசியதாவது :

குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டும் அதற்கு நன்றி தெரிவித்தும் நான் உரையாற்றுவது என்பது இந்த உரையின் தன்மைக்காக அல்ல, ஒன்றிய அரசு தயாரித்த அந்த உரையை சகிப்புத்தன்மையோடும் பொறுமையோடும் வாசித்ததற்காக நன்றி தெரிவிக்கவே நான் இந்த உரை



யின் மீது உரையாற்றுகிறேன்.

இந்த உரையில், மூன்றாவது முறையாக அறுதிப் பெரும்பான்மையோடு ஆட்சி அமைத்துள்ளதாக பெருமையோடு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பெருமைக்கு நீங்கள் உரியவர்கள்தானா என்பதை மனசாட்சியோடு எண்ணிப் பார்க்கவேண்டுகிறேன். இந்த அவையில் பிரதமர் மோடியும் பா. ஜ.க.வும் தனித்து 370 இடங்களிலும் கூட்டணிக் கட்சிகளோடு 400 இடங்களிலும் வெற்றி பெறுவோம் என்று மார் தட்டிக் கூறினார்கள்.

ஆனால் அவர்களுக்குக் கிடைத்திருப்பது 240 தொகுதிகள் மட்டுமே! இந்த 240 தொகுதிகள், எப்படிப் பெரும்பான்மை ஆகும் என்பதை மோடிக்கு எந்த கணிதப் பேராசிரியர் சொல்லிக் கொடுத்தார் என்று தெரியவில்லை (சிரிப்பு)

### திராவிட கருத்தியல்

இந்த அவைக்கு 32 வயதிலேயே வந்தவன் என்ற முறையில் திராவிடக் கருத்தியலை உருவாக்கி அந்தக் கருத்தியலுக்கு உருவம் தந்த தந்தை பெரியார் அதனைப் பாதுகாத்து அரியணை ஏற்றிய அண்ணா, கலைஞர் - அவர்களுக்குப் பிறகு இந்தக் கருத்தியலை தொடர்ந்து பேணிப் பாதுகாத்து அரசாட்சி நடத்தும் மு.க.ஸ்டாலின் ஆகிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் இந்த நேரத்தில், இந்த திராவிட மண்தான் 2வது முறையாக மோடியின் மதவாத, காவி அரசியலை வெறுத்து ஒதுக்கியிருக்கிறது. அதற்காக நான் தமிழ்நாட்டு மக்களுக்கும் நன்றி சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.


தொடர்ச்சி 4-ஆம் பக்ககம்